1996 ஆகஸ்ட் 10]

மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்ற நிகழ்ச்சிகளை மாத்திரம்தான் தற்போது தொலைக்காட்சியில் காட்டி வருகிறார்கள். தமிழகச் சட்டமன்றச் செய்திகளைப் பொறுத்தவரையில் செய்திகள், கேள்வி நேரத்தில் வெளியிடுகிற முக்கியமான தகவல்கள் எல்லாம் தொலைக் காட்சியிலும், வானொலியிலும் செய்தியாக வருகின்றன.. தினமும் பத்து நிமிட நேரம் 'சட்டமன்ற நிகழ்ச்சி' என்ற பெயரில் அந்த நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுகிறது. அதுமாத்திரமல்லாமல், ஆளுநர் அவர்களின் உரையின் போதும், நிதி நிலை அறிக்கையின் போதும் நடைபெறுகிற முக்கியமான விவாதங்கள் குறித்தும் தொலைக்காட்சியிலும், வானொலியிலும் தொடர்ந்து செய்திகளைச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அதைப்போல சட்டமன்ற நிகழ்ச்சிகளில் முக்கியமான செய்திகள் அனைத்தும் எல்லாப் பத்திரிகைகளிலும் வந்து கொண்டுதான் இருக்கின்றன. ஏதாவது முக்கியமான செய்தி விடுபட்டிருக்குமானால் இதையே ஒரு வாய்ப்பாகக் கருதி பத்திரிகையாளர்கள் சட்டமன்றச் செய்திகளை வெளியிடும்போது எல்லா சட்டமன்ற உறுப்பினர்களின் செய்திகளும் இடம்பெறுகிற வகையில் வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அலுவல் ஆய்வுக் குழுவிலே இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டு, ஒத்தி வைக்கலாம் என்று முடிவு எடுத்தது எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் தெரியும்.

வினா எண் *158,* திரு இரா. மதிவாணன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

158--

சிங்காரவேலருக்குச் சிலை நிறுவுதல்

1713*--திரு. இரா. மதிவாணன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சிந்தனைச் சிற்பி "சிங்காரவேலர்" அவர்களுக்கு சென்னையில் சிலை நிறுவி மீனவர்களின் நீண்ட நாள் கோரிக்கையை அரசு நிறைவேற்றுமா?

[*1996 ஆகஸ்ட் 10*

மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. இரா. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1946-ல் சிங்காரவேலர் மறைந்தபோது, அமரர் அண்ணா அவர்கள் இரங்கல் கடிதத்திலே, சிங்காரவேலர் மீனவர் குலத்திலே பிறக்காமல் இருந்திருப்பாரேயானால், மாம்பலம், மைலாப்பூரிலே பிறந்திருப்பாரேயானால், இவருக்கு மாஸ்கோவிலே சிலை வைத்திருப்பார்கள் என்று அன்றையதினம் அண்ணா அவர்கள் கடிதத்திலே எழுதினார்கள். அதைத் தொடர்ந்து நமது மாண்புமிகு முதல்வர், கலைஞர் அவர்கள், 1985-லே தந்தை பெரியார் எவ்வளவு முக்கியமானவரோ, பேரறிஞர் அண்ணா அவர்கள் எவ்வளவு முக்கியமானவரோ, அதைப்போலவே சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் முக்கியமானவர் என்று எழுதியிருக்கிறார்கள். ஆகவே, அவருடைய சிலையை விரைவில் வைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1995 ஆம் ஆண்டு முந்தைய ஆட்சியால், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலருக்கும் மாவீரன் புலித்தேவனுக்கும் சிலைகள் வைக்கப்படும் என்று அறிவிப்பை மட்டும் தந்துவிட்டு, பத்திரிகைகளிலே விளம்பரங்களாக மட்டும் வந்து போய்விட்டன. ஒரு சிலையை வைப்பது என்று சொன்னால், அன்றைய நிலவரப்படி, 2¾ லட்சம் ரூபாயும், அடிப்பீடம் அமைக்க 1½ லட்சம் ரூபாயும், ஆக மொத்தம் 4¼ லட்சம் ரூபாய் செலவாகும். அப்படி செலவாகும் என்பது மாத்திரம் அல்ல, அறிவிப்பைத் தந்துவிட்டு, நிதி ஒதுக்கீடு செய்யாமல் போய்விட்டார்கள். புதிதாகப் பொறுப்பேற்றிருக்கிற இந்த அரசு, கொள்கை ரீதியாக சிலை வைப்பதற்கான முடிவை எடுத்து, அதற்குப் பின்னர் பரிசீலனை செய்து, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

1996 ஆகஸ்ட் 10]

திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் அவர்களுடைய இல்லமானது, இன்றைக்கு இருக்கின்ற விவேகானந்தர் இல்லத்திற்குள்ளே உள்ள வளாகத்திலே அவர் வசித்த இல்லமானது, இருப்பதாகச் சொல்லப்படுகிறது. எனவே, அந்த இல்லத்தை அரசு அவருடைய நினைவாக ஏற்று, அதை அவருடையு நினைவுக்கூடாக அரசு அறிவிக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தியாகத் தலைவர்கள், நாட்டுக்காக உழைத்த தலைவர்கள் பலருடைய நினைவு இல்லங்கள் எல்லாம், கடந்த 5 ஆண்டுக் காலத்தில் சீர்குலைந்து போய்விட்டன. முதலில் அவைகளை செம்மைப்படுத்தி விட்டு, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையைப் பரிசீலித்து அரசு முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இ. புகழேந்தி.

திரு. இ. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் தலைவராக, முதல் பொதுவுடமைத் தமிழனாக, மே தின விழாவை துணைக் கண்டத்திலே, முதன் முதலாக சென்னை மாநகரத்திலே கொண்டாடியவராக, பல மொழிகள் கற்ற அறிஞராக, சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல் வகுப்பார் எனச் சொல்லிக் கொண்டவர்களே இருந்த காலத்தில், மீனவச் சமுதாயத்தின் தோன்றலாக, வழக்கறிஞராகப் பதிவு செய்து கொண்டு, இழிவுகளை எதிர்கொண்டவராக, திராவிடர் தந்தை பெரியாரின் நட்புக்குப் பாத்திரமாகி, குடியரசு இதழில் பல கட்டுரைகள் படைத்தவராக, பேரறிஞர் அண்ணாவின்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: புகழாரம் சூட்டுவதிலே தவறு இல்லை, கேள்வியைக் கேளுங்கள்.

திரு. இ. புகழேந்தி: பேரறிஞர் அண்ணா அவர்களுடைய அன்புக்குப் பாத்திரமாகி, மாண்புமிகு முதல்வர், தலைவர் கலைஞர், மாண்புமிகு இனமானப் பேராசிரியர் ஆகியோருடைய போற்றுதலுக்கு உரியவரான, சுயமரியாதை வாழ்வே சுகவாழ்வு, பகுத்தறிவு நெறியே உயர் நெறியென இறுதி வரை பகுத்தறிவுவாதியாக வாழ்ந்து மறைந்த,

பகுத்தறிவுப் பண்பாளர் சிங்காரவேலனார் பெயரை, மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களில், குறிப்பாக மீனவச் சமுதாயத்திற்கான நல்வாழ்வுத் திட்டங்களில் ஏதேனும் ஒன்றுக்குச் சூட்டிட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய புகழாரத்திற்கு உரியவர், தலைவர் கலைஞர் அவர்களுடைய சிந்தனையில் என்றைக்கும் நீக்கமற இடம் பெற்று இருக்கின்றவர். எனவே, இந்தக் கோரிக்கையை ஏற்று, சிந்தனைச் சிற்பி சிங்காரவேலருக்கு சிலை அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அ.வ. அப்துல் நாசர்.

திரு. அ.வ. அப்துல் நாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே சென்ற ஆட்சிக் காலத்திலே, காயிதே மில்லத் அவர்களுக்காக மணிமண்டபம் கட்டுவோம், அதற்காக இடம் ஆர்ஜிதம் செய்வோம் என்று சொல்லியிருந்தார்கள். அதற்கான வேலைகள் இன்னும் நடைபெற்றதாகத் தெரியவில்லை. எனவே, விரைவில் மணிமண்டபம் கட்டி முடிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10–15*

மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்: இது குறித்து அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. சுப்பராயன்.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் திராவிட இயக்கத்திற்கும் சமதர்ம இயக்கத்திற்கும் மகத்தான பங்களிப்பு செலுத்தி, மறைந்தாலும் மறக்க முடியாத மனிதராக இருக்கின்ற சிங்காரவேலர் அவர்களுடைய அறிவியல் பூர்வமான, பகுத்தறிவுபூர்வமான கருத்துக்களை தமிழக மக்களுக்கு வெளியிடுகின்ற முறையில் அவருடைய நூல்களை தேசீய உடைமைகளாக்கி மலிவுப்பதிப்பு போட்டு விற்பனை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை

1996 ஆகஸ்ட் 10]

ஏற்று இந்த அரசு செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *159*, திரு. மீ. அ. வைத்தியலிங்கம், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

159--

தலித் கிருத்துவர்களை தாழ்த்தப்பட்டோர் பட்டியிலில் சேர்த்தல்

150*--திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தலித் கிருத்துவர்களை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளும் செயல் திட்டம் அரசின் கவனத்தில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தலித் கிருத்துவர்களை அட்டவணைப் பட்டியலில் சேர்ப்பது குறித்து பெறப்பட்ட கோரிக்கை மைய அரசிற்குப் பரிந்துரை செய்து அனுப்பப்பட்டுள்ளது. மைய அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மீ.அ. வைத்தியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சமுதாயத்திலே பெரும்பாலும் தாழ்த்தப்பட்டவர்கள்தான் தங்களுடைய மிக மோசமான நிலைகளை நீக்கிக் கொள்வதற்காக, மரியாதை ஏற்பட வேண்டுமென்பதற்காக தலித் கிருஸ்தவர்களாக மாறியிருப்பதால் அரசு விரைந்து அதன்மீது நடவடிக்கைகள் எடுக்க மத்திய அரசை வற்புறுத்துமா என அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசைக் கேட்டு விரைந்து இந்த அரசு நல்ல முடிவு எடுக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன். *1974*-ல் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த காலத்தில்தான் இந்த மக்கள், மதம் மாறிய ஆதிதிராவிட கிருஸ்துவ மக்கள் ஆதிதிராவிடர் எனக் கருதப்பட